# சிறுவர் ஜெப மலர்

மரம்: 21 | கனி: 11 | நவம்பர் 2023 | ஆண்டு சந்தா: ₹ 25/- | தனி பிரதி: ₹ 5/-



# அந்நியரை உபசரிக்க நாடுங்கள்!

ஆசிரியர் J. செல்வக்குமார்

## EVERY LAST SUNDAY

AFTERNOON 1.30 PM TO 2.30 PM AN EXCITING PROGRAM FOR CHILDREN

SATHIYAM TV, COMFORTER DIGITAL CHANNEL AND IN ALL SOCIAL MEDIA PLATFORM



## குட்டீஸ்.. உங்களுக்கு ஒரு நல்ல செய்தி..

ஜாலி டைம், **Ablaze** எல்லாம்
இனி நீங்கள் ஜாலி கிட்ஸ் **(Jolly Kids )**
என்ற **youtube** சேனலில் பார்க்கலாம்.

https://www.youtube.com/@JollyKidsprograms

## இயேசுவின் கண்மணிகள் ஜெபத் திட்டம்

(CHILDREN'S PRAYER PLAN)

சிறுபிள்ளைகள் ஜெபத் திட்டம்!



**நீங்கள் சிறுவர்களாக கூடி குழுவாக ஜெபிக்கிறீர்களா?**

உங்கள் குழுவை எங்களுடன் பதிவு செய்து கொள்ளுங்கள். உங்களுக்காக ஜெபிக்கவும், ஜெபக்குறிப்புகள் அனுப்பவும் வசதியாக இருக்கும்.

https://kids.jesusredeems.com/cpc/



இந்த சிறுவர் ஜெபமலரில் கொடுக்கப்படுகின்ற எல்லா வினாக்களுக்கும் விடை எழுதி (94883 75315) இந்த எண்ணுக்கு எங்களுக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் வாழ்க்கையில் இயேசு செய்த அற்புதங்களை எங்களுக்கு தெரியப்படுத்த மறவாதீர்கள்.

**எங்கள் முகவரி...**

**இயேசு விடுவிக்கிறார், சிறுவர் ஊழியம்,**
நாலுமாவடி 628211, தூத்துக்குடி மாவட்டம்.
Cell: 94883 75315.
Website: kids.jesusredeems.com email: kids@jesusredeems.org

For 24 Hours Prayer Support: 04639 - 35 35 35

# அந்நியரை உபசரிக்க நாடுங்கள்

ஒரு மனிதர் எருசலேமில் இருந்து எரிகோவிற்கு போகிறார். திருடர்கள் அவரை கொள்ளையடிக்க வந்து கொண்டு இருக்கிறார்கள். அவரை திருடர்களிடம் இருந்து காப்பாற்றி எரிகோவில் சேர்க்க முயற்சி பண்ணுங்கள். சீக்கிரம்!



ஐயோ வழி காட்ட முடியவில்லையா? பாவம் அந்த மனிதர் திருடர்களிடம் மாட்டிக்கொண்டார். திருடர்கள் அவரை அடித்து அவர் பணத்தை எல்லாம் பிடுங்கிக்கொண்டு அவரை விட்டு விட்டு சென்று விட்டனர்.



அந்த வழியாக ஒரு ஆசாரியன் வருகிறான். இவர் எருசலேம் மக்களுக்காக தேவனிடம் ஜெபிப்பவர். அவர் அந்த மனிதரை பார்த்தும் உதவி செய்யவில்லை, சென்று விட்டார்.

அடுத்து அந்த வழியாக ஒரு லேவியன் வருகிறான். இவரும் தேவனுக்காக ஊழியம் செய்தவர். அவரும் எருசலேம் ஊர் காரர் தான். அவரும் அந்த மனிதனை பார்த்து உதவாமல் சென்று விட்டார்.



கொஞ்சம் நேரம் கழித்து சமாரியா ஊரை சேர்ந்த ஒரு சமாரியன் வருகிறான். அவன் அடிபட்ட அந்த மனிதனுக்கு இரக்கம் காட்டி, அவன் காயங்களுக்கு மருந்து போட்டு, தன் கழுதையின் மேல் ஏற்றி ஒரு சத்திரத்தில் சேர்க்கிறான். பின் சத்திரக்காரனிடம் கொஞ்சம் பணத்தை கொடுத்து அந்த மனிதனின் மருத்துவ செலவையும் கொடுத்து விட்டு சென்றான்.

ஒருத்தர் மக்களுக்காக ஜெபிக்கிறவர், இன்னொருவர் தேவனுடைய ஊழியர் இன்னொருவர் சாதாரண மனிதன், இதில் அந்த அடிபட்ட மனிதனுக்கு சம்பந்தம் இல்லாதவர் யார்? அந்த சமாரியன் தானே? பாருங்கள், அந்த சமாரியன் யார் என்று தெரியாத அந்த அந்நிய மனிதனுக்கு உதவி செய்திருக்கிறார்.




ரோமர் 12:13ல், இதை தான் ‘‘**அந்நியரை உபசரிக்க நாடுங்கள்**’’ என்று சொல்லப்பட்டு இருக்கிறது.

நாம கூட குட்டிஸ், ஜெபிக்கலாம், இயேசப்பாவை பற்றி மற்றவர்களுக்கு சொல்லலாம். ஆனால் மற்றவர்கள் மேல் நமக்கு அன்பும், அக்கறையும் இல்லையென்றால், நாம் செய்யும் ஜெபமும், ஊழியமும் வீண் தெரியுமா? ஒருத்தரை நேசித்தால் தான் அவருக்கு உதவ, உபசரிக்க முடியும்.

அப்படியே ஒருவரை நேசித்தால் தான் அவருக்காக அக்கறையோடு ஜெபிக்க முடியும். ஒருவரை நேசித்தால் தான் இயேசுவை பற்றி அவர்களுக்கு சொல்ல முடியும். உங்களுக்கு புரிந்திருக்கும் தானே? நீங்களும் மற்றவர்களை நேசித்து உதவி செய்யுங்கள் சரியா!

**சமாரியன் அடிபட்ட நபரை தன்னுடைய வாகனத்தில் ஏற்றிச் சென்றார். கீழ் உள்ள எண்களை இணைத்து அந்த வாகனம் என்ன என்று கண்டுபிடித்து சொல்லுங்கள்!**



என்ன வாகனம் கண்டுபிடிச்சிட்டீங்களா?...

முக்கிய ஜெபக்குறிப்பு

இஸ்ரேல் தேசத்தின் போர்கள் தடுக்கப்பட, சமாதானம் உண்டாக ஜெபிப்போம். அங்குள்ள சிறு குழந்தைகள், பெரியவர்கள் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.





'இயேசு விடுவிக்கிறார்'

## 45வது சிறுவர் எழுப்புதல் முகாமில்



# எழுப்புதல் அக்கினி!



**க**டந்த 44 வருடங்களாக நடைபெற்ற சிறுவர் எழுப்புதல் முகாமை அற்புதமாக நடத்திக் கொடுத்த கர்த்தர், கடந்த (2023) அக். 2ம் தேதியன்று, நாலுமாவடி-தேவனுடைய கூடாரத்தில் வைத்து நடத்தப்பட்ட (45வது) **சிறுவர் எழுப்புதல் முகாமை** அபரிவிதமாக ஆசீர்வதித்துக் கொடுத்தார்.

இந்த முகாமில், சுமார் **4,500**க்கும் அதிகமான சிறு பிள்ளைகள் கலந்து கொண்டார்கள்.

இந்த முகாம், '**பரலோகம் செல்வதற்கு இயேசுதான் வழி!**' என்கிற கருத்தை சிறு பிள்ளைகளுக்கு உணர்த்தும் வண்ணமாக, '**வழி!**' என்ற கருப் பொருளில் நடைபெற்றது.

பாடல் வேளை, ஆராதனை வேளை, அதைத் தொடர்ந்து, தடைகளையும், சோதனைகளையும் எப்படி ஜெபித்து மேற்கொள்ள வேண்டும்?' என்பதை, குரு நாடகங்கள், நடன அசைவுகள் (Choreo), மாஜிக் மற்றும் தனி வகுப்புகள் மூலமாக சிறு பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்கப்பட்டது.



சிறு பிள்ளைகளை உற்சாகப்படுத்தும்படியாக, கேள்வி-பதில் போட்டிகளும், Puppet நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டது.

சகோதரி **ஆஷ்லி எபெனேசர்** (சிறுவர் ஊழியப் பொறுப்பாளர்) அவர்கள், '**பரலோகம் செல்ல முதல் படி, இரட்சிப்பு!**' என்பதைப் பற்றி சிறு பிள்ளைகளோடு கலந்துரையாடினார்கள்.

அனைத்து சிறு பிள்ளைகளுக்கும் பரிசுத்த ஆவியானவரைப் பற்றி விளக்கிச் சொல்லி, அவர்களை அபிஷேகத்திற்குள்ளாக நம்முடைய இயேசு விடுவிக்கிறார் ஊழியர்கள் நடத்தினார்கள். அனேக சிறு பிள்ளைகளை கர்த்தர் தமது எழுப்புதல் அக்கினியினால் அளவில்லாமல் நிரப்பினார்.



நமது சகோதரர் **மோகன் சி. லாசரஸ்** அவர்கள், எழுப்புதல் செய்தியைப் பகிர்ந்து கொண்டு, வந்திருந்த சிறு பிள்ளைகளின் ஆசீர்வாதத்திற்காக பாரத்தோடு ஜெபித்தார்கள்.

வந்திருந்த அனைத்து சிறு பிள்ளைகளுக்கும் காலையும், மாலையும், இனிப்பு வழங்கப்பட்டது. அவர்கள் திரும்பிச் செல்லும்போது நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது. இந்த முகாமில் கர்த்தர் தாம் செய்ய நினைத்ததை செய்து, தமது நாமத்தை மகிமைப்படுத்தினார். - ஒருங்கிணைப்பாளர்.

**1 வது வார ஜெபக் குறிப்புகள்!**




# தேயிலை

**ஹாய் நண்பர்களே!**

இந்த மாதமும் நம் வாழ்க்கையில் அதிகமாக பயன்படுத்தும் ஒரு உணவுப் பொருளை பற்றிப் பார்க்கப் போகிறோம். அது என்னதுனு தெரிந்துகொள்ள ஆர்வமா இருக்கீங்களா? அப்போ வாங்க தெரிஞ்சுக்கலாம்!

**உற்பத்தி:** இந்தியா, அசாம் மாநிலம்.





**தேயிலை பயிரிடுதல்:** 6.37 லட்சம் ஹெக்டேர் பரப்பளவு (2018)



**பயன்:** தேயிலை மர எண்ணெய் (கிருமி நாசினி), மனதிற்கும், நரம்புகளுக்கும் உற்சாகத்தை ஏற்படுத்தும்.

## ஜெபம்



1. எங்கள் பரலோக தகப்பனே! எங்கள் இந்திய தேசத்திற்கு தேவன் தந்த தேயிலை உற்பத்திக்காக நன்றி இயேசப்பா! எந்த கலப்படமும் செய்யக்கூடாது இயேசப்பா.

2. இயேசப்பா இன்னும் தேயிலை உற்பத்தியை எங்கள் தேசத்தில் அதிகரித்து தரும்படியாக ஜெபிக்கிறோம் இயேசப்பா!

3. அதை உற்பத்தி செய்யும் ஒவ்வொரு விவசாயிகளையும் தேவன் ஆசீர்வதிக்கும்படியாக ஜெபிக்கிறோம் இயேசப்பா!

**எங்கள் ஜெபத்தைக் கேட்டதற்காய் நன்றி இயேசப்பா! ஆமென்.**

# குழந்தைகள் தினம்



ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் 14ஆம் நாளை குழந்தைகள் தினமாக கொண்டாடி வருகிறோம். நவம்பர் மாதம் 14ஆம் நாளுக்கு என்ன சிறப்பு என்றால் நம் பாரத நாட்டின் முதல் பிரதமராக இருந்த பண்டித ஜவஹர்லால் நேருவின் பிறந்தநாள் ஆகும். அதனால் தான் நவம்பர் 14ஆம் நாளை குழந்தைகள் தினமாக கொண்டாடி வருகிறோம்.

நவம்பர் 14 – ஏன் குழந்தைகள் தினமாகக் கொண்டாடுகிறார்கள் தெரியுமா? நேரு அவர்கள் குழந்தைகளிடம் மிகவும் அன்பு கொண்டவர். ஆகவே அவர் பிறந்தநாளை குழந்தைகள் தினமாக கொண்டாடுகிறார்கள். உலகில் எந்த நாடுகளுக்கு சென்றாலும் அந்த நாட்டின் குழந்தைகளிடம் மிகவும் அன்பு செலுத்துவார்.

ஒருமுறை ஜப்பான் நாட்டிற்கு நேரு சென்றபோது அந்த நாட்டு குழந்தைகளோடு அன்பாக பேசி, மகிழ்ந்த வேளையில், ஜப்பான் நாட்டின் சிறுவர்களே! உங்களுக்கு என்ன வேண்டும்? என்று கேட்டார். உடனே ஜப்பான் நாட்டின் சிறுவர்கள் எங்களுக்கு ஒரு ''யானைக் குட்டி'' வேண்டும் என்று கேட்டார்கள். உடனே நேரு அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் நான் இந்தியாவிற்கு சென்றதும் உங்களுக்காக யானைக் குட்டியை அனுப்பி வைப்பேன் என்று உறுதி கூறிவிட்டு சென்றார். இந்தியா திரும்பியவுடன் முதல் வேலையாக கப்பல் மூலம் ஒரு சிறு யானை குட்டியை ஜப்பான் சிறுவர்களுக்காக பரிசாக அனுப்பி வைத்தார். ஜப்பான் நாட்டு சிறுவர்கள் எத்தனை மகிழ்ச்சி அடைந்து இருப்பார்கள். நேருவுக்கு குழந்தைகள் கேட்டதை கொடுத்தது, மிகுந்த சந்தோஷம். குழந்தைகள் மீது அவர் எவ்வளவு அன்பு பாசம் வைத்திருந்தார் என்பது இதன் மூலம் தெரிய வருகிறது.



அது போலத் தான் நம்முடைய இயேசப்பாவும், சின்ன பிள்ளைங்க மீது ரொம்பவும் அன்புள்ளவர். நீங்க என்ன கேட்டாலும் இயேசப்பா தருவாங்க குட்டீஸ்! சிறு பிள்ளைகள் என்னிடத்திற்கு வருகிறதற்கு இடம் கொடுங்கள், அவர்களை தடைப் பண்ணாதீர்கள் என்று சொல்லி இருக்கிறார்.

**பாருங்க குட்டீஸ்! நீங்க இயேசப்பாவுக்கு மிகவும் முக்கியமானவர்கள்.**





2 வது வார

## ஜெபக் குறிப்புகள்!



# சிறுகுழந்தைககளுக்கு சுவிசேஷம்

**ஹாய் குட்டீஸ்!**

இன்றைக்கும் கூட ஒரு முக்கியமான, புதுவிதமான காரியத்திற்காக ஜெபிக்கப் போகிறோம் குட்டீஸ்! அது என்ன தெரியுமா?



இயேசு கிறிஸ்துவை அறியாத குழந்தைகள்: **250 மில்லியன்**



தெருவோரங்களில் உள்ள சிறுகுழந்தைகள்



சிறையில் உள்ள சிறுகுழந்தைகள்

**இவர்களுக்கெல்லாம் சுவிசேஷம் அறிவிக்கப்பட வேண்டும்...**

## ஜெபம்



1. எங்களை நேசிக்கும் அன்பு இயேசப்பா! உம்மை ஏற்றுக் கொண்ட குழந்தைகள் எழும்பி உங்க சுவிசேஷத்தை மற்ற குழந்தைகளுக்கு சொல்ல உதவி செய்யுங்க இயேசப்பா!
2. சிறு குழந்தைகளை தேவன் ஆத்தும பாரத்தினால் நிரப்பும்படியாக ஜெபிக்கிறேன் இயேசப்பா!
3. சிறுகுழந்தைகள் கர்த்தருக்காக ஒரு போர்ச் சேவகராக எழும்பும்படியாக ஜெபிக்கிறேன் இயேசப்பா!
4. சிறு குழந்தைகளின் மத்தியில் கடைசிக்கால அபிஷேகம் ஊற்றப்படும்படியாக ஜெபிக்கிறேன் இயேசப்பா.

**எங்கள் ஜெபத்தைக் கேட்டதற்காய் நன்றி இயேசப்பா!**

# இயேசு கிறிஸ்துவின் வழியில் நடக்கலாம் வாங்க...



**Hi குட்டீஸ்!**

நீங்க எல்லாரும் இயேசப்பா காட்டுற நல்வழியில் நடக்கிற செல்லப் பிள்ளைகளாச்சே!... இந்த மாத மலரில் அந்நியரை உபசரிப்பதைக் குறித்து பார்த்துக் கொண்டு வருகிறோம். இயேசப்பா நமக்கு அந்நியரை உபசரிக்க வேண்டும் என்று கற்றுக் கொடுக்குறாங்க. ஆனா, அந்நியரை உபசரிக்காததால என்ன நடந்தது என்பதை வேதத்தில் உள்ள ஒரு சம்பவத்தின் மூலமாக நாம் தெரிந்துக் கொள்ளப் போகிறோம்.

வேதத்தில் லூக்கா 16: 19 to 28ம் வசனங்களில் ஐசுவரியவான் லாசருவின் சம்பவம் குறித்து வாசிக்கிறோம். பாருங்கள்! லாசரு தன் பசியை ஆற்றுவதற்கு ஐசுவரியவானுடைய மேசையில் இருந்து துணிக்கைகள் ஏதாவது விழுமா என்று பார்த்துக் கொண்டிருந்தான். அவன் சரீரத்திலும் வியாதியோடு,





வயிற்று பசியோடு இருந்தவனுக்கு அந்த ஐசுவரியவான் எதுவுமே கொடுக்கவே இல்லை. அவன் கீழே விழுகிற துணிக்கைகளை எடுத்து சாப்பிட்டான். பாருங்க குட்டீஸ் அந்நியரை உபசரிக்க வேண்டும் என்று தானே இயேசப்பா நமக்கு கற்றுக் கொடுத்துருக்காங்க. ஆனால் அந்த ஐசுவரியவான், தான் மிகுதியான ஆஸ்திகளை உடையவனாயிருந்தும் அந்த அந்நியனான லாசருவுக்கு உதவி செய்ய, உபசரிக்க தவறிவிட்டான். அதனால் ஐசுவரியவானுக்கு பரலோகத்தில் இடம் இல்லாமல் போய்விட்டது.

பாருங்க குட்டீஸ்! நீங்களும் இயேசப்பா காட்டுற வழியில நடக்கனும். வேதத்தில் நிறைய இடங்களில் அந்நியரை உபசரிப்பதை குறித்து இயேசப்பா நமக்கு சொல்லியிருக்காங்க. அந்நியரை உபசரிக்க மறந்துறாதீங்க. உபசரிக்க நாடுங்க. அப்பொழுது உங்களையும் இயேசப்பா ஆசீர்வதிப்பாங்க.





# தானியேலோடு

பகுதி-11

## வேத தியானம் (தானியேல் - 11)

### I. தியானப் பகுதி:

ஹாய் குட்டீஸ்!!!! இந்த மாதம் நாம் தானியேல் 11:21-33ல் உள்ள பகுதியை தியானிக்கப்போகிறோம்.

தானியேல் தான் கண்ட தரிசனத்தில் தென்திசை ராஜாவும் வடதிசை ராஜாவும் ஒருவருக்கு விரோதமாக ஒருவர் யுத்தம்பண்ணினார்கள். பின்பு அவமதிக்கப்பட்டவன் ஒருவன் இச்சகம் பேசி ராஜ்யத்தை கட்டிக்கொண்டான். தேசம் சுகவாழ்வோடு இருக்கையில் அனைத்தையும் கொள்ளையிட்டு சூறையாடி, பொருளை பங்கிட்டு, அரண்களுக்கு விரோதமாக உபாயங்களை யோசித்தான். தென்றிசை ராஜாவுக்கு விரோதமாக போர் செய்ய எழும்பினான். தென்றிசை ராஜாவால் நிற்ககூடாமல் அநேகர் கொலையுண்டார்கள். அவன் தன் தேசத்துக்கு திரும்பி தன் இருதயத்தை பரிசுத்த உடன்படிக்கைக்கு விரோதமாக வைத்து அதற்கானதைச் செய்தான். அவன் சேனைகள் எழும்பி அரணான பரிசுத்த ஸ்தலத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்கி, பாழாக்கும் அருவருப்பை அங்கே வைத்தார்கள்.



உடன்படிக்கைக்கு துரோகிகளாயிருக்கிறவர்களை கள்ளமார்க்கத்தாராக்கினான். தேவனை அறிந்த ஜனங்கள் திடங்கொண்டு, தேவனுக்கு ஏற்ற வழியில் நடந்து அநேகருக்கு அறிவை உணர்த்தினார்கள்.

இந்த உலகத்தில் தேவனுடைய பிள்ளைகளாக வாழும் போது நமக்கு அநேக எதிர்ப்புகள் வரும். அந்த ராஜா போல நமக்கு விரோதமாக அநேகர் எழும்பலாம், சூழ்நிலைகள் நமக்கு எதிராக மாறலாம். ஆனால் தேவனை அறிந்தவர்களாகிய நாம் தைரியமுள்ளவர்களாய் எந்த சூழ்நிலையிலும் தேவனை விட்டு விலகாமல் பரிசுத்தத்தை காத்துக்கொண்டு சாட்சியான வாழ்க்கை வாழ வேண்டும் குட்டீஸ்!!!!!



## II. மனப்பாட வசனம்

**என் நாமத்தினிமித்தம் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள். முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்.** (**மாற்கு** 13:13)

## III. வினா விடை

1. இன்னும் __________ ராஜாக்கள் பெர்சியாவில் எழும்புவார்கள்.
2. __________ ராஜா பலவானாயிருப்பான்.
3. __________ ராஜ்யத்தில் தண்டல்காரனைத் திரியப்பண்ணுகிற ஒருவன் ஸ்தானத்தில் எழும்புவான்.
4. ஜனங்களில் __________ அநேகருக்கு அறிவை உணர்த்துவார்கள்.
5. __________ __________ இருந்துவரும் செய்திகள் அவனைக் கலங்கப்பண்ணும்.

## IV. இந்த பகுதியில் நாம் அநேக ராஜாக்களை பற்றி தெரிந்துக்கொண்டோம். கீழே கொடுக்கப்பட்டுள்ள ராஜாவை எண்கள் இணைத்து முழுமைப்படுத்தி கலர் பண்ணுங்க குட்டீஸ்!!!!



## V. நான் யார்?

1. நான் எல்லாரிலும் மகா ஐசுவரிய சம்பன்னனாகி, என் ஐசுவரியத்தினால் பலங்கொண்டு, கிரேக்க ராஜ்யத்துக்கு விரோதமாகச் சகலரையும் எழுப்பிவிடுவேன் நான் யார்? _________.
2. நான் எழும்பி, பிரபலமாய் ஆண்டு, எனக்கு இஷ்டமானபடி செய்வேன் நான் யார்? _________.
3. நான் கடுங்கோபங்கொண்டு புறப்பட்டு போய், வடதிசை ராஜாவோடே யுத்தம்பண்ணுவேன் நான் யார்? _________.
4. நான் எழும்பும் போது எனக்கு ராஜ்யபாரத்தின் மேன்மையைக் கொடுக்கமாட்டார்கள். ஆனாலும் நான் சமாதானமாய் நுழைந்து, இச்சகம் பேசி, ராஜ்யத்தைக் கட்டிக்கொள்ளுவேன் நான் யார்? _________.
5. நான் இரதங்களோடும் குதிரைவீரர்களோடும் அநேகம் கப்பல்களோடும் சூறைக்காற்றுபோல் தென்றிசை ராஜாவுக்கு விரோதமாய் வருவேன் நான் யார்? _________.



**தானியேல் அதிகாரத்தை படித்து Activity செய்தவர்கள் மற்றும் தினமும் 15 நிமிடம் ஜெபம் பண்ணியவர்கள் தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் எங்களுக்கு அனுப்பினால் வருட கடைசியில் உங்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.**

**இந்த 94883 75315 எண்ணுக்கு அனுப்பவும்**

3 வது வார

## ஜெபக் குறிப்புகள்!




# அசூர் பழங்குடி இனமக்கள்

ஹலோ Friends,

இந்த மாதமும் கூட ஒரு SPECIAL ஆன பழங்குடி இனமக்களை பற்றிப் பார்க்க போகிறோம். யாருனு எதிர்பார்த்து கொண்டு இருக்கீங்களா? வாங்க பார்க்கலாம்!

**வாழுமிடம்:** இந்தியாவின் ஜார்கண்ட் மற்றும் பிஹார்





**மொழி:** அசூர் மற்றும் பிரிஜியா



**தொழில்:** இரும்பு உருக்கும் தொழில் மற்றும் வேளாண்மைத் பரம்பரைத் தொழில்



**வழிபாடு:** இயற்கை, முன்னோர்களின் தெய்வம்.

## ஜெபம்

1. எங்களை நேசிக்கும் அன்பு இயேசப்பா! இந்த நாளிலும் கூட அசூர் பழங்குடி இனமக்களுக்காக ஜெபிக்கிறோம்.



2. அவர்கள் இயேசு கிறிஸ்துதான் மெய்யான தெய்வம் என்று அறிந்து கொள்ளும்படி செய்யுங்க இயேசப்பா!

3. அவர்களுக்கு அரசாங்கத்தால் நல்ல கல்வியறிவு கொடுக்கப்படும்படியாக ஜெபிக்கிறோம் இயேசப்பா!

4. அங்குள்ள சிறுகுழந்தைகள் மத்தியில் எழுப்புதலின அக்கினி ஊற்றப்படும்படியாக ஜெபிக்கிறோம் இயேசப்பா!

**இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பிதாவே ஆமென்!**

4 வது வார

## ஜெபக் குறிப்புகள்!

# சிறு குழந்தைகள் மத்தியில் 'எழுப்புதல்'



**ஹாய் குட்டீஸ்!**

இன்றைக்கும் கூட நம்முடைய இந்தியாவில் வாழும் சிறு குழந்தைகள் மத்தியில் எழுப்புதல் அக்கினி ஊற்றப்பட நாம் ஜெபிக்கப் போகிறோம். அதைப் பற்றி கொஞ்சம் பார்ப்போமா!

## இந்தியாவில் உள்ள சிறுகுழந்தைகள்:

**சிறு குழந்தைகளின் எண்ணிக்கை:**
444 மில்லியன் அதிகரிப்பு





பள்ளிக்கு செல்லும் குழந்தைகளில் 27.4% குழந்தைகள் சமூக வலைத் தளங்களுக்கு அடிமைகளாகி உள்ளனர்.

**தெருவோரங்களில் வாழும் குழந்தைகள்:**
18 மில்லியன்



## ஜெபம்

1. எங்களை நேசிக்கும் அன்பு இயேசப்பா! இந்தநாளிலும் கூட எங்கள் இந்தியாவில் வாழும் குழந்தைகள் இரட்சிக்கப்படும்படியாக உம்மிடத்தில் ஜெபிக்கிறோம் இயேசப்பா.



2. எல்லா சிறு குழந்தைகள் மீதும் எழுப்புதல் அக்கினி போடப்படும்படியாக ஜெபிக்கிறோம் இயேசப்பா!

3. பலவிதமான அடிமைத்தனத்திலிருக்கும் சிறு குழந்தைகள் விடுதலையாக்கப்படணும் இயேசப்பா!

**இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பிதாவே ஆமென்!**

# செய்திகள்

## இஸ்ரேல் - பாலத்தீனம் இடையிலான பிரச்சனை எப்போது, எப்படி தொடங்கியது?

இஸ்ரேல் பாலத்தீனம் இடையிலான இன்றைய போர் பல சகாப்தங்களுக்கு முன்பு தொடங்கியது. பிரிட்டன் ஆளுகையின் கீழ் இப்பகுதி வந்தது முதல் யூதர்களுக்கும் அரபியர்களுக்கும் இடையிலான சண்டை நிகழ்ந்து கொண்டிருக்கிறது.



இந்தப் பகுதியில் சிறுபான்மையினராக இருந்த யூதர்களின் எண்ணிக்கை ஹிட்லரின் இனப் படுகொலை உள்ளிட்ட காரணங்களால் அதிகரித்தது. பாலத்தீனத்தில் யூதர்களுக்கும் அரபிகளுக்கும் இடையே வன்முறை பெரிதானது.கடந்த 1947ஆம் ஆண்டில் பிரிட்டன் பாலத்தீனத்தை விட்டு வெளியேற முடிவு செய்தது. அப்போது பாலத்தீனத்தை இரண்டாகப் பிரித்து யூதர்களுக்கு ஒரு நாடாக, அரபிகளுக்கு ஒரு நாடாகத் தோற்றுவிக்கவும், இரு சமூகத்துக்கும் புனித நகரமாகக் கருதப்படும் ஜெருசலேமை சர்வதேச நகரமாக மாற்றவும் ஐ.நா ஆதரவளித்தது.

இந்தத் திட்டத்தை யூத தலைவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் பாலத்தீன அரபிகள் நிராகரித்தார்கள். இந்த பிரச்னையைத் தீர்க்க முடியாத பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் நாட்டை விட்டு 1948இல் வெளியேறினர். அதன் பின்னர் 1948ஆம் ஆண்டு மே மாதம் 14ஆம் தேதி யூத தலைவர்கள் இஸ்ரேல் என்னும் தனி நாடு தோற்றுவிக்கப்பட்டதாக அறிவித்தனர். அதே தினத்தில் இஸ்ரேலை தனி நாடாக அமெரிக்க அதிபர் ஹேரி ட்ரூமேன் அங்கீகரித்தார்.இஸ்ரேல் மொத்த ஜெருசலேமையும் தனது தலைநகர் எனக் கூறுகிறது. அதே நேரம் பாலத்தீனம் கிழக்கு ஜெருசலேமை தனது எதிர்கால பாலத்தீன நாட்டின் தலைநகர் எனக் கூறுகிறது.

அமெரிக்க அதிபர் டிரம்ப் கடந்த 2017ஆம் ஆண்டு ஜெருசலேமை இஸ்ரேலின் தலைநகராக அங்கீகரித்தார். பிரிட்டன், ஜப்பான், சீனா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் அமெரிக்க அதிபரின் முடிவுக்கு ஐ.நாவில் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தன. மேற்குக் கரையில் வசிக்கும் பாலத்தீனர்கள் இஸ்ரேல் தங்களைக் கொடுமைப்படுத்துவதாகவும், பணயக் கைதிகளாக வைத்திருப்பதாகவும் கூறுகிறார்கள். ஆனால், பாலத்தீனர்களின் வன்முறையில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள நடவடிக்கைகளை எடுப்பதாக இஸ்ரேல் கூறுகிறது.

**– BBC website அக்டோபர் 14.**

# ஜெபக்குறிப்பு:

- இந்தியாவிலுள்ள 60 கோடி சிறு பிள்ளைகளில், பள்ளிக்குச் செல்கிற, வேலைக்குப் போகிற அனைத்து சிறு பிள்ளைகளும் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.
- 50 கோடி ஆத்துமாக்களுக்கு சுவிசேஷம் என்கிற திட்டத்தை நிறைவேற்றி முடிக்க. மோகன் **Uncle**க்கு கர்த்தர் சரீர சுகம், பெலன், கிருபை கொடுத்து நடத்தவும், அதற்கு தேவையான ஆலோசனை களையும், ஆட்களையும் கொடுக்க ஜெபிப்போம்.
- 10 கோடி சிறு பிள்ளைகளுக்கு சுவிசேஷம் சொல்ல பொறுப்பெடுத்துள்ள இயேசு விடுவிக்கிறார் சிறுவர் ஊழியர்களுக்காகவும், JR Kids Fellowship நடத்திக் கொண்டிருக்கும் அனைத்து Leaders மற்றும் கெத்செமனே ஜெப மையத்திலுள்ள ஊழியர்களுக்காகவும், சிறுவர் ஊழியம் செய்கிற Igniters அண்ணன்மார்கள். அக்காமார்கள் அனைவருக்கும். கர்த்தர் ஞானம், சுகம், பெலன் அளித்து 1 கோடி சிறு பிள்ளைகளை ஆதாயப்படுத்த கிருபை தரும்படி ஜெபிப்போம்.
- இயேசப்பா கொடுத்த இத்திட்டத்திற்கு விரோதமாக செயல்படுகிற பிசாசின் கிரியைகள் அனைத்தும் வாய்க்காமல் போக ஜெபிப்போம்.
- இயேசப்பா விரும்புகிறதுபோல, இந்த ஆத்தும ஆதாயத் திட்டத்தை நிறைவேற்றி முடிக்க ஆவியானவர் உதவி செய்ய ஜெபிப்போம்.
- இந்தியாவில் இருக்கிற அனைத்து சிறு பிள்ளைகளும் இயேசுவின் அன்பை அறிந்து கொள்ள, அவரை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ள ஜெபிப்போம்.

## இயேசு விடுவிக்கிறார் சிறுவர் ஊழியம்

இதில் சிறுவர் ஊழியத்தின் பங்கு 10 கோடி சிறு பிள்ளைகளுக்கு சுவிசேஷம் அறிவிக்க, அதில் 1 கோடி சிறு பிள்ளைகளை இரட்சிப்புக்குள் வழி நடத்த

## 7 மணி நேர ஜெபத்திட்டம்

**தினமும் இத்திட்டத்திற்காக 15 நிமிடம் ஜெபிப்பேன்**

| | | | |
|---|---|---|---|
| Day 1 | Day 2 | Day 3 | Day 4 |
| Day 5 | Day 6 | Day 7 | Day 8 |
| Day 9 | Day 10 | Day 11 | Day 12 |
| Day 13 | Day 14 | Day 15 | Day 16 |
| Day 17 | Day 18 | Day 19 | Day 20 |
| Day 21 | Day 22 | Day 23 | Day 24 |
| Day 25 | Day 26 | Day 27 | Day 28 |
| Day 29 | Day 30 | | |

Name ..............................................

Place ..............................................

Mobile ..............................................

**ஒவ்வொரு நாளும் இந்தத் திட்டத்திற்காக ஜெபித்து, இந்தக் கட்டங்களை டிக் செய்து மாதம் முடிவில் எங்களுக்கு photo எடுத்து இந்த whatsapp எண்ணுக்கு 9488375315 அனுப்பவும்**

Contact: 9488375315
eMail: kids@jesusredeems.org
https://kids.jesusredeems.com

Jesus Redeems,
TOG Nalumavadi. 628211

Registered with Registered News Paper of India No: TNTAM/2003/10126.
Postal Registration No: TTN/04/2021-2023
Date of Publication: 25-10-2023
Date of Posting: 29th & 30th of every month.
Office of Posting:BPC, Tuticorin HO-628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-82/SR/2021-2023.




Owned and Published by **J. Selvakumar** from Jesus Redeems, Nalumavadi-628 211
and Printed by Mrs.Joyce Lazarus at Angel Press, 13/81A, Lakshmipuram,
Nalumavadi-628 211. EDITOR **J. SELVAKUMAR**